நாள்.20.03.2025

**அசல் வழக்கு எண்.22/2010**
**பெயர்.வெங்கட்ரீமன்**

**த.பெ.கோவிந்தராஜ்**

**வா.சா.2– 9 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.வ.எண்.237/2009 மற்றும் இந்த வழக்கிலும் அப்பாசாமி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கை அப்பாசாமி மட்டும் தாக்கல் செய்துள்ளாரா மற்ற நபர்களும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். யார் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் ஆமாம். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியாது என்றால் ஆமாம். இந்த வழக்கிற்கு சாட்சி சொல்ல எனக்குநீதிமன்றம் மூலம் அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலம் நான் சொல்லி தயார் செய்ததா அப்பாசாமி சொல்லி தயார் செய்தாரா என்றால் அப்பாசாமி சொல்லிதான் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் பற்றி தெரியாது என்றால் தெரியும். அப்பாசாமியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 40 வருடம். எனக்கு தற்போது 50 வயது. வழக்கின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு எனது சொத்து மேல்புறம் உள்ளதாக சொல்லியுள்ளேன் எந்த சர்வே எண் சொத்திற்கு மேல்புறம் என்றால் சர்வே எண்.342 –க்கு மேல்புறம் எனது சொத்து உள்ளது. நான் சொத்துகள் வாங்கி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டால்தான் அதை உரிமை கொண்டாட முடியும் என்றால் ஆமாம்.சர்வே எண்.342 சொத்தை அப்பாசாமி கிரையம் வாங்யுள்ளாரா கிரைய பத்திரம் பார்த்தேனா என்றால் இல்லை. கிரையம் வாங்காத நிலையில் சர்வே எண்.342 அப்பாசாமியுடையது என்று உரிமை கொண்டாட முடியுமா என்றால் தெரியாது. BPT நெல் எத்தனை செண்டில் வாதி சாகுபடி செய்துள்ளார் என்றால் 18 ஏக்கர் இருக்கும். சர்வே எண்.342 ,18 ஏக்கரா என்றால் இல்லை. மற்ற இடத்திலும் சேர்த்துதான் சாகுபடி செய்துள்ளார். மற்ற இடம் என்பது எந்த இடம் என்றால் எனக்கு சர்வே எண்கள் தெரியாது. 18 ஏக்கரும் ஒரே தாக்காக உள்ளதா தனித்தனியாக உள்ளதா என்றால் ஒரே தாக்காக உள்ளது. எத்தனை நாள் பயிராக உள்ளது என்றால் தற்போது அறுவடை செய்துவிட்டார்.நான் வாக்குமூலம் தாக்கல் செய்தபோது நெல் சாகுபடி இல்லை என்றால் நெல் சாகுபடி இருந்தது. அறுவடை எப்போது முடிந்தது என்றால் போன வாரம்.

எனது வாக்குமூலம் 19.03.2025 ல் தாக்கல் செய்தபோது நிலங்களில் நெல்பயிர்கள் இல்லை என்றால் ஆமாம். மூர்த்தியை தெரியுமா என்றால் தெரியாது. மகாதேவியை தெரியுமா என்றால் தெரியாது. மூர்த்தி, மகாதேவி இருவரும் வாதிக்கு எதிராக வழக்கு நடத்தி வரும் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துகளில் சில இடங்களில் மூர்த்திக்கு சொந்தமான நிலங்களில் அவர் BPT நெல் சாகுபடி செய்து வருகிறார் என்றால் இல்லை. மூர்த்தி கிரையம் வாங்கி சாகுபடி செய்து வருகிறார் என்பதை என்னால் மறுக்க முடியாது என்றால் அவர் சாகுபடி செய்யவில்லை. அப்பாசாமி எனக்கு உறவா என்றால் தூரத்து உறவு. ஒரே சமுதாயத்தை சேர்ந்வர்கள். அ.வ எண்.237/2009 ல் வக்கீல் சொல்லி சாட்சியம் அளித்ததாக சொல்லியுள்ளேன் தற்போது அப்பாசாமி சொல்லியதால் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொல்லியுள்ளேன் இரண்டுமே தவறு. அப்பாசாமி சொல்லிதான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். மூர்த்தியை எனக்கு நேரடியாக தெரியும் அவர் வெளியூர் என்பதால் அப்பாசாமிக்கு ஆதரவாகவும் மூர்த்திக்கு எதிராகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. அப்பாசாமி அனுபவம் செய்து வருவதாக சொல்லும் 18 ஏக்கர் நிலம் அவர் கிரயம் வாங்கவில்லை அவர் அனுபவத்திலும் இல்லை என்றால் அவர் அனுபவத்தில்தான் உள்ளது. நான் அப்பாசாமிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.